| Scale | E | Tempo | 130 | Style | Dance> Discohands |
|---|---|---|---|---|---|

39. மகிமை உள்ள தேவா ஸ்தோத்திரம்

மகிமையுள்ள தேவா ஸ்தோத்திரம்
மகத்துவமுள்ள தேவா ஸ்தோத்திரம்
மரணத்தை வென்றவரே ஸ்தோத்திரம்
மேசியாவே உமக்கு ஸ்தோத்திரம்

1

மத்யஸ்தரானவரே ஸ்தோத்திரம்
மன்னிக்கும் கிறிஸ்துவே ஸ்தோத்திரம்
மறுரூபமாக்குபவர் ஸ்தோத்திரம்
மனுஷ குமாரனே ஸ்தோத்திரம்
மனுஷ சாயலானீர் ஸ்தோத்திரம்
மன்னுயிரையே காத்தீர் ஸ்தோத்திரம்

2

மகிமைக்கு பாத்திரரே ஸ்தோத்திரம்
மகிமையின் இராஜாவே ஸ்தோத்திரம்
மகிமையின் ஐசுவரியமே ஸ்தோத்திரம்
மகா பரிசுத்தரே ஸ்தோத்திரம்
மனதுருகிறவர் ஸ்தோத்திரம்
மா கிருபை உள்ளவர் ஸ்தோத்திரம்

3

மாசில்லாதவரே ஸ்தோத்திரம்
மாறாத தேவனே ஸ்தோத்திரம்
மீட்பரானவரே ஸ்தோத்திரம்
மீறுதல் மன்னிப்பவர் ஸ்தோத்திரம்
முற்றும் அழகுள்ளவர் ஸ்தோத்திரம்
மெய்யான ஜீவ ஒளி ஸ்தோத்திரம்